க்ரோதி ஸு தை மீ
ஜனவரி - பிப்ரவரி 2025

மலர்: 7
இதழ்: 10

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com







ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவாய நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்


4, கேசவப்பெருமாள் சன்னிதி தெரு,மயிலாப்பூர், சென்னை-600 004
☎2495 3799 / 4386 3747 ★ Email:svdd.mylai@gmail.com ★ Website: www.svdd.com


## மாணவ, மாணவியர்களின் கல்வி மேன்மைக்காக

## ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை

### 02.02.2025 - ஞாயிற்றுக்கிழமை

ஞானாநந்த மயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் |
ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே ||

ஹயக்ரீவ ஹயக்ரீவ ஹயக்ரீவேதீயோ வதேத் |
தஸ்ய நிஸ்ஸரதோ வாணீ ஜஹ்நு கன்யா ப்ரவாஹவத் ||

ஶ்ரிய: பதியான ஸர்வேஸ்வரன் சேதநர்களை உஜ்ஜீவிப்பதற்காக பல அவதாரங்களை செய்து வருகின்றான். அவற்றுள் ராம கிருஷ்ணாதி விபவ அவதாரங்களை இதிஹாஸ புராணங்களான ஸ்ரீமத் ராமாயணமும், மஹாபாரதமும் புகழ்கின்றன. இவ்வவதாரங்களுக்கு முன்னதாகவே வேதம், ஞானம், அறிவு அழியாமல் இருக்க அருள்புரிய தோன்றிய அவதாரம் ஸ்ரீ ஹயக்ரீவ அவதாரம். அந்த லக்ஷ்மீ ஹயக்ரீவன் நான்கு வேத ஸ்வரூபமே. அப்படிப்பட்ட ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவன் நம் மாடமாமயிலையில் ஆஸ்திகர்களை அநுக்ரஹிப்பதற்காகவும், ஞானம், அறிவு, வாக்கு, வித்யை இவையெல்லாம் அளித்து நம்மை அநுக்ரஹிப்பதற்காகவும் கோயில் கொண்டுள்ளான். ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனுக்கு ஆஸ்தீகர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாளது க்ரோதி வருஷம் தை மாதம் 15 ம் தேதி (28-1-2025) செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு விசேஷ திருமஞ்ஜனமும், தை மாதம் 20ம் தேதி (2.2.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனையும் அதிவிமர்சையாக நடைபெற உள்ளது.

ஆஸ்திகர்கள் இந்த விசேஷமான உத்ஸவத்தில் அன்வயித்து ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனுடையவும், ஸ்வாமி தேசிகனுடையவும் அருளினால் ஞான ஐஸ்வர்யாதி ஸௌபாக்யங்களைப் பெறவேண்டுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| 28.01.2025 (செவ்வாய்) காலை 10:00 மணி | - | விசேஷ திருமஞ்சனம் |
| 02.02.2025 (ஞாயிறு) காலை 08:00 மணி | - | வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை (காலை 08:00 மணிக்கு அர்ச்சனை ஆரம்பம் ; மாலை 04:00 மணிக்கு அர்ச்சனை ஆரம்பம்) |

**ஸங்கல்ப அர்ச்சனை நன்கொடை – ரூ. 300/–**

R. ராகவன், R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன் - தர்மகர்த்தாக்கள்

ஸ்ரீ:

க்ரோதி ௵ தை மீ
ஜனவரி - பிப்ரவரி 2025

மலர்: 7
இதழ்: 10

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: yeSKay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

வேங்கடத்தை பதியாக வாழ்வீர்காள்!

உத்தராயண மாதங்களில் முதன்மையானது இந்த தை மாதம். உத்தராயண புண்யகாலம் தொடங்கும் முதல் நாள் மகர ஸங்க்ராந்தி பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த மாதத்திற்கு அதிஷ்டானமான எம்பெருமான் நாராயணன். நாராயணன் மேகத்தைப் போன்ற நீலநிறமுடையவர். பத்மம், சங்கம், கதை, சக்ரம் மற்றும் பீதாம்பரத்தையும் தரிப்பவர். உத்தம ரத்நங்களாலே செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்திருப்பவர் என்று கூறுகிறது ஸ்ரீ பாஞ்சராத்ரம்.

ஸ்வாமி தேசிகனும் தாம் அருளிய பன்னிருநாமத்தில் நாம் நம்முடைய உதரத்தில் சாற்றிக்கொள்ளும் திருமண்காப்புக்கு அதிஷ்டான தேவதை நாராயணன் என்றும் அவன் மேகநிறத்தவன் என்றும், சிறந்த வலம்புரி சங்கங்களை ஆயுதமாகக் கொண்டவன் என்றும், அவனது ஸ்தானம் மேற்கு திசை என்றும், அந்த நாரணன் சாஸ்த்ரங்களை ப்ரவத்திப்பித்து கருணையால் நம்மை அடைக்கலம் கொண்டு காக்கப்பட வேண்டிய வஸ்துவாக ஏற்றுகொள்கிறான் என்றும் கூறுகிறார்.

பரமயோகியான ஸ்ரீ பீஷ்மர் உத்தராயணம் பிறந்து தை மாதத்தில் அமாவாஸைக்குப் பிறகு வரும் அஷ்டமி திதியில் பரமபதம் எழுந்தருளினார். மேலும் தை அமாவாஸை கழித்து ஏழாம் நாள் ரத ஸப்தமி. இது ஒரு சிறப்பான பண்டிகை.

பக்திஸாரர் எனும் திருமழிசையாழ்வார் தை மகத்தில் பூமியின் புண்ய ஸ்தலமான மஹீஸாரத்தில் (திருமழிசையில்) அவதரித்தார். ‘‘மகத்தில் பிறந்தவன் ஜகத்தை ஆள்வான்’’ என்பர். மகத்தில் பிறந்தவர் வீரராகவும் மிக்க தைர்யசாலியாகவும் இருப்பர். உக்ரம் அதிகமாக இருப்பினும் உதவியும் அதிகமாயிருக்கும். நாம் உய்வதற்கு உறுதுணையாக இரண்டு நூல்களை அளித்த மஹநீயர்.

கோவிந்தர் எனும் திருநாமம் கொண்ட எம்பார் என்ற ஆசார்யவள்ளல் தை புனர்வஸுவில் அவதாரம் செய்தவர். ஜ்ஞானம், வைராக்யம், பகவத் பக்தி, காருண்யம், ஸத்கர்மாநுஷ்டான நிஷ்டை, ஆத்மகுணபூர்த்தி முதலான பல குணபூர்த்திகளுடன் எழுந்தருளியிருந்த பெரும்புகழான் கூரத்தாழ்வான் அவதரித்ததும் தை மாதமே.

தை வெள்ளிகிழமைகளில் தாயாரின் வாஹனப் புறப்பாடுகளுடனும், ஸங்க்ராந்தி உத்ஸவமும் பெருமாளின் பரிவேட்டை மற்றும் வனபோஜன உத்ஸவமும் நடைபெறவுள்ளது.

ஸ்ரீதேசிகனின் பெருமை போற்றும் வ்யாஸம், சில விசேஷக் கட்டுரைகள், வழக்கமான தமிழ், ஆங்கிலத் தொடர்கள், மார்கழி மாத உத்ஸவங்களின் வண்ணப் படங்கள் இவற்றுடன் இந்தமாத தேசிக ஸந்தேசம் உங்கள் கரங்களில்... ❋

ஸ்ரீ:

# Heralding A New, Auspicious Beginning

## FROM THE DESK OF TRUSTEES



Pranams! As we step into the auspicious Tamil month of Thai, let us take a moment to reflect on the divine celebrations of the sacred Margazhi month and eagerly anticipate the joyous Utsavams that await us in Thai.

Margazhi, a time dedicated to spiritual awakening and devotion, saw our temple host grand celebrations this year. The chanting of the Thiruppavai, daily recitations of the Divya Prabandham, and the mesmerising early morning procession of Sri Andal and Thiruneerattu Utsavam filled the atmosphere with divine energy. Notably, the Paddhathi Music Festivals at Desika Bhavanam enriched our spiritual observances with melodious offerings. After the Pagal Pathu Utsavam, the Ira Pathu is being conducted with great devotion after the grand Vaikunta Ekadasi celebrations. Thousands gathered for the Paramapadha Vaasal Darsanam, seeking the blessings of Lord Srinivasa, as bhakti resonated throughout the temple.

Now, as we embrace the month of Thai, known for new beginnings and prosperity, the temple has a series of special events lined up. Thai will begin with the auspicious Thai Pongal celebrations, offering our gratitude to the Almighty for His abundant blessings. This will be followed by the Adhyayana Utsavam Satrumurai, Iyarpa Satrumurai, Desika Prabandham Satrumurai and ThirupPallandu Thodakkam. On January 26 we will celebrate the Annual Pari Vettai Utsavam, and on February 1, the Vanabhojanam Utsavam will be held.

Additionally, on February 2, the temple will conduct the Annual Hayagreeva Visesha Sankalpa Archanai for the benefit of students preparing for their exams. This special event seeks the blessings of Lord Hayagreeva, the embodiment of knowledge and wisdom, to guide our young devotees toward success in their studies.

As in previous years, we also have the Padhuka Sahasram Utsavam scheduled for February 9.

We express my heartfelt gratitude to all the devotees, volunteers, and patrons whose unwavering support and contributions make these celebrations a success. Your devotion and participation enrich the temple's activities and help preserve our rich traditions for future generations.

Let us continue to unite in devotion and service, seeking the grace of our Acharyas and the blessings of the Divya Dampathis. May this Thai month bring prosperity, peace, and spiritual fulfilment to all. ❊

# க்ரோதி வருட தை மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி / பிப்ரவரி | தை | | | | | |
| 14.01.2025 | 1 | ப்ரதமை | செவ்வாய் | புனர்வஸு | உத்தராயண புண்யகாலம். ஸங்க்ராந்தி உத்ஸவம் – பொங்கல் பண்டிகை – தை மாதப்பிறப்பு. காலை பெருமாள், தாயார், மூலவர், உத்ஸவர், தேசிகன் உத்ஸவர் திருமஞ்ஜனம். ஊர்கோல உத்ஸவம் – மாலை பெருமாள், ஆண்டாள், திருவீதி புறப்பாடு, இராப்பத்து 5ம் நாள் திருவாய் மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸங்க்ராந்தி உத்ஸவம்: M/s. ஸுந்தரம் சாரிடீஸ். இராப்பத்து உத்ஸவம் (10 நாட்களும்): ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 15.01.2025 | 2 | த்விதீயை | புதன் | புஷ்யம் | கனு உத்ஸவம் – காலை கனு ஆஸ்தானம். இராப்பத்து 6-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு. திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | கனு உத்ஸவம்: ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா |
| 16.01.2025 | 3 | த்ருதீயை | வியாழன் | ஆயில்யம் | இராப்பத்து 7-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு. திருவாய் மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 17.01.2025 | 4 | சதுர்த்தி | வெள்ளி | மகம் | திருமழிசையாழ்வார் சாற்றுமுறை. காலை பெருமாள், ஆழ்வார் வீதி புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை. இராப்பத்து 8-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள் புறப்பாடு. திருவாய்மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | திருமழிசையாழ்வார் சாற்றுமுறை: ஸ்ரீ A. வீரராகவன் – ஸ்ரீ A.V. ராமன் |
| 18.01.2025 | 5 | சதுர்த்தி / பஞ்சமி | சனி | பூரம் | இராப்பத்து 9-ம் நாள். பெருமாள், ஆழ்வார் உள்புறப்பாடு. திருவாய் மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 19.01.2025 | 6 | பஞ்சமி / ஷஷ்டி | ஞாயிறு | உத்திரம் | நம்மாழ்வார் திருவடித்தொழல். காலை பெருமாள், ஆழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிப் புறப் பாடு. திருவாய்மொழி ஸேவாகாலம். சாற்றுமுறை | |
| 20.01.2025 | 7 | ஷஷ்டி / ஸப்தமி | திங்கள் | ஹஸ்தம் | கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம். காலை வீதிப்புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. மாலை இயற்பா சாற்றுமுறை | கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்: ஸ்ரீ P.V. ராகவன் பண்ட். இயற்பா சாற்றுமுறை: ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |
| 21.01.2025 | 8 | ஸப்தமி | செவ்வாய் | சித்திரை | தேசிக ப்ரபந்தம் சாற்றுமுறை | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி / பிப்ரவரி | தை | | | | | |
| 22.01.2025 | 9 | அஷ்டமி | புதன் | ஸ்வாதி | திருப்பல்லாண்டு தொடக்கம் | ஸ்ரீ S.S. ராகவன் |
| 23.01.2025 | 10 | நவமி | வியாழன் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 24.01.2025 | 11 | தசமி | வெள்ளி | அனுஷம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் யானை வாஹனம் உள்புறப்பாடு. ஆஸ்தானம் | 1. ஸ்ரீ M.V. ஸந்தானம் – 2. ஸ்ரீ R. ராமக்ருஷ்ணன் |
| 25.01.2025 | 12 | ஏகாதசி | சனி | கேட்டை | பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ V.R. ஸ்ரீநிவாஸன் |
| 26.01.2025 | 13 | த்வாதசி | ஞாயிறு | கேட்டை | தொண்டரடிப்பொடியாழ்வார். பரிவேட்டை உத்ஸவம் காலை பெருமாள் லக்ஷ்மீபுரம் எழுந்தருளல் | பரிவேட்டை உத்ஸவம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம் |
| 27.01.2025 | 14 | த்ரயோதசி | திங்கள் | மூலம் | திருமால்வடை | |
| 28.01.2025 | 15 | சதுர்தசி | செவ்வாய் | பூராடம் | ஸேனைநாதன் | |
| 29.01.2025 | 16 | அமாவாசை | புதன் | உத்திராடம் | பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ S. நாராயணன் குடும்பதினர் |
| 30.01.2025 | 17 | ப்ரதமை | வியாழன் | ச்ரவணம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதி புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன் குடும்பத்தினர் |
| 31.01.2025 | 18 | த்விதீயை | வெள்ளி | அவிட்டம் | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் கிளி வாஹனம் உள்புறப்பாடு. ஆஸ்தானம் | ஸ்ரீ G. ரங்கராஜன் |
| 01.02.2025 | 19 | த்ருதீயை | சனி | சதயம் / பூரட்டாதி | வனபோஜன உத்ஸவம். பெருமாள், தேசிகன் பலாதோப்பு எழுந்தருளல் | வனபோஜனம் ட்ரஸ்ட் |
| 02.02.2025 | 20 | சதுர்த்தி | ஞாயிறு | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 03.02.2025 | 21 | பஞ்சமி | திங்கள் | ரேவதி | திருமால்வடை | |
| 04.02.2025 | 22 | ஷஷ்டி / ஸப்தமி | செவ்வாய் | அச்வினி | ரத ஸப்தமி. வீதிபுறப்பாடு. காலை ஸூர்ய ப்ரபை, மாலை சந்த்ர ப்ரபை | ஸ்ரீ ஜெயகுமார், C/o. கொடவாசல் க்ருஷ்ணன் |
| 05.02.2025 | 23 | அஷ்டமி | புதன் | பரணி | திருமால்வடை | |
| 06.02.2025 | 24 | நவமி | வியாழன் | க்ருத்திகை | திருமங்கையாழ்வார் | |
| 07.02.2025 | 25 | தசமி | வெள்ளி | ரோஹிணீ | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் தங்கக்கேடயம் உள்புறப்பாடு. ஆஸ்தானம் | ஸ்ரீ S. ஸுந்தரம் குடும்பத்தினர் |
| 08.02.2025 | 26 | ஏகாதசி | சனி | ம்ருகசீர்ஷம் | காலை பெருமாள் உத்ஸவர் திரு மஞ்ஜனம். மாலை வீதி புறப்பாடு | ஸ்ரீ M.K. ஸ்ரீதரன் |
| 09.02.2025 | 27 | த்வாதசி | ஞாயிறு | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர் | |

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி / பிப்ரவரி | தை | | | | | |
| 10.02.2025 | 28 | த்ரயோதசி | திங்கள் | புனர்வஸு | ஸ்ரீ ராமர் திருமஞ்ஜனம், ஆஸ்தானம் | V.D.R. பண்ட் |
| 11.02.2025 | 29 | சதுர்தசி | செவ்வாய் | புஷ்யம் | பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. பொழுதுடன் ஆராதனம் | வேதபாராயண ஸபா |
| 12.02.2025 | 30 | பௌர்ணமி | புதன் | ஆயில்யம் | பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ R. ராமக்ருஷ்ணன் |

## வைணவ வழக்குச் சொற்கள் 5

**உப்புச்சாறு:** அமிழ்தம்

**உக்கம்:** விசிறி

**உபாதி:** சேர்த்துக் கொள்ளல்

**உரி:** தோல்

**உபய வே / உ. வே.:** உபய வேதாந்தி (திவ்ய ப்ரபந்தம், வேதம் ஆகிய இரண்டிலும் பயிற்சியும் பாண்டித்யமும் உடையவர்

**உத்தேச்யம்:** உட்குறிப்பு, நோக்கம்

**உறுகை:** கிட்டுதல்

**உந்தி:** கொப்பூழ் (தொப்புள்)

**ஊழியம்:** கைங்கர்யம்; தொண்டு

**ஊர்த்வ புண்ட்ரம்:** திருமண் காப்பு

**ஊத்தை:** அசுத்தம்

**எதிர்த்தட்டு:** மாறானது

**எரிதுரும்பு:** நைவேத்யம்

**எளிவந்த தன்மை:** ஸௌலப்யம்; தன்னை எளிமைப்படுத்திக் கொண்டு பழகும் தன்மை

**எச்சரிகை:** கோஷ்டி விநியோகத்தின் முன்னும் பின்னும், ஆய்த்தமாவதற்கும் கலைவதற்கும் விடுக்கும் அடையாளக் குரல்; பெருமாள் ஆராதனத்தின் போதும் பயன்படுத்தப்படும். கட்டியம் (எச்சரிகை)

**எல்லை நிலம்:** முடிவிடம்; இறுதிநிலை

**எழுந்தருளல்:** வருதல்; வந்திருத்தல்

**எடுப்பிக்கை:** எடுக்கும் படி பண்ணுதல்;

**எடுப்பு:** உயர்வு

**ஏழை:** பகவத்கிருபை கிடைக்கப் பெறாதவன்

**ஏளப்பண்ணுதல்:** எழுந்தருளப்பண்ணுதல்; விக்ரஹம், சிலை, மூர்த்தி போன்றவற்றை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றுதல்

**ஏள:** எழுந்தருளுக

**ஏகல்: பார்க்க:** இயல்

**ஏகாந்திகள்:** மறந்தும் புறந்தொழாதவர்; திருமால் அன்றி வேறு தெய்வங்களை வணங்காத, ஆனால் பலனை வேண்டி வழிபடுபவர்கள்

**ஐராவதம்: இந்திரனின் யானை**

**ஐம்படை:** பஞ்சாயுதம் (கதை, வில், சங்கு, சக்ரம், கத்தி)

**ஐம்படைத்தாலி:** பஞ்சாயுதமும் கோத்த கழுத்துச் சங்கிலி

**ஐயங்கார்:** ஐந்து அங்கங்களை (ஸம்ஸ்காரங்களை) ஆசாரியனிடமிருந்து அடைந்துள்ளவர்கள்

**ஒருவந்தம்:** நிச்சயம்

**ஒருங்க விடுதல்:** ஒரு சேர விடுதல்

**ஒரு நாயகம்:** தனியரசாட்சி

**ஒருதலை:** நிச்சயம்

**ஓரை:** இராசி; லக்னம்

**ஓராண் வழி:** ஒரு குருவிற்கு ஒரு முக்கிய சிஷ்யர், பின்னவர்க்கு இன்னொரு முக்கிய சிஷ்யர் என்று வழி வழியாகத் தொடர்ந்துசெல்லும் ஆசார்ய பரம்பரை

**ஓலக்கம்:** ஸாந்நித்யம்; காட்சி கொடுத்தல்; தர்பார்

**கலிகன்றி:** திருமங்கையாழ்வார்

**கலியன்:** திருமங்கையாழ்வார்

**கண்டு அருளப் பண்ணுதல்:** அமுது செய்தல்; நைவேத்தியம் செய்தல்

**கடகர்:** ஆற்றுப்படுத்துபவர்; ஆசார்யன்; தூதுவர்

**கடாரம்:** பெரிய பாத்திரம்

**'தென்னிந்திய வைணவம் – ஓர் அறிமுகம்'** நூலிலிருந்து

*(தொடரும்...)*

**Sponsorships and donations towards publication expenses are welcome**


ஸ்ரீ:

# தேசிகனும் அவரது ஸ்ரீ ஸூக்திகளும்

ஸ்ரீ உ. வே. கூத்தப்பாக்கம் க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி,
ந்யாய சிரோமணி, வேதாந்த வித்வான், காஞ்சீபுரம், வைகுண்டவாஸீ

''யதிராஜேந நிபத்த நாயகஸ்ரீ: மஹதீ குருபங்க்தி ஹாரயஷ்டி'' என்று உரைக்கிறது யதிராஜ ஸப்ததி. யதிராஜன் குரு பங்க்தியாகிற முக்தாஹாரத்திற்கு நடுநாயகக் கல்லாய்த் திகழ்வதாக ஸ்ரீ தேசிகனின னுஸந்தானம். ந்யாய பரிசுத்தியின் ஆரம்பத்தில், ''பத்யுஸ்ஸம்யமிநாம் ப்ரணம்ய சரணௌ தத்பாத கோடீரயோஸ் ஸம்பந்தேன ஸமித்யமான விபவான்'' என்று எம்பெருமானாருடைய திருவடி ஸம் பந்தத்தால் (சிஷ்ய பரம்பரையிலடங்கின படியால்) பிற்பட்ட ஆசார்யர்களும், திருமுடி ஸம்பந்தத்தால் (உபதேசகருடைய பரம்பரையிடலங்கின படியால்) முற்பட்ட ஆசார்யர்களும் மேன்மை யடைந்துள்ள தாக எம்பெருமானாரைப் பற்றிய அங்குள்ள ஸ்ரீ தேசிகனினநுஸந்தானம். இதை அடியொற்றி இவ்வண்ணமே ஸ்ரீ தேசிகன் விஷயத்தில் நாமனுஸந்தித்தால் மிகையாகாது. 1. பூர்வர்களின் க்ரந்தங்களில் வருங் கலக்கங்களை ஸ்மனம் செய்தும், நம்போலுள்ளார்க்கு உபஜீவ்யங்களான ஸாரதமார்த்தங்களைப் பொழிந்தும் பல க்ரந்தங்களை அருளிச் செய்திருப்பதும், 2. பூர்வாசார்யாபிப்ரேதமான அர்த்த விசேஷங்களை தானனுஷ்டித்து உலகிற்கு ப்ரகாசப் படுத்தியிருப்பதுமே இதற்கு ஹேது. இப்படி மிகப்பெருமை வாய்ந்த ஸ்வாமி நமதாசார்யன் ஆசார்யர்களுள் நான்கு தரத்தினருண்டு:- 1. ப்ரவசனத்தாலேயே சிலர். 2. பிரபந்த முகத்தாலேயே சிலர். 3. அனுஷ்டான முகத்தாலேயே சிலர். 4. மேற்சொன்ன மூன்று வகைகளாலுஞ் சிலர் ஆசார்யர்களாகிறாரென்று. இவைகளுள் நான்காம் பிரிவிலடங்கினவர் நமதாசார்யன் தேசிகன்.

இவரையே தேசிகன் என்று ஏனையோரனைவரும் போற்றி வருகிறோம். காரணம் இவருடைய தேசிகத்வம் விலக்ஷணமாயிருப்பதே. தேசிகனென்ற சொல்லுக்கு உபதேசிக்கிறவன் என்று பொருள். லௌகிககர்மங்களாக நம்மால் கருதப்படும் சௌசம், ஸ்நானம், திருமண்காப்பணிதல், பொருள் ஸம்பாதனம், உண்ணுதல், உறங்குதல் முதலான க்ருத்யங்களையும், வைதிகங்களான பகவதாராதனம், வைச்வதேவம், பூணூல் நூற்பது, முறுக்குவது, ப்ரதிஷ்டை செய்வது போன்ற கர்மங்களையும் முறையோடு செய்வதற்காக ஸச்சரித்ர ரக்ஷை, பாஞ்சராத்ரரக்ஷை, ஆஹார நியமம், பகவதாராதன ப்ரயோக காரிகை, வைச்வதேவ காரிகை, யஜ்ஞோபவீ த ப்ரதிஷ்டைபோன்ற பல க்ரந்தங்களை இயற்றி நமக்குபதேசம் செய்தருளுகிறார் ஸ்வாமி. மேலும் 'ஸுபாஷித நீவி'' என்ற கிரந்தமியற்றி நமக்கழகாகப் பேசவும் கற்பிக்கிறார். இவ் வண்ணம் லௌகிகம், வைதிகமெல்லாவற்றிலும் உபதேச கராயிருப்பதால் நம் வேங்கடநாதன் தேசிகனென்று போற்றப்படுகிறார் என்று தேறுகிறது.



#### ப்ரபந்தங்களின் சிறப்பு

இவரியற்றிய நூல்கள் பல பல. அதன் பெருமைகளும் பல பல. ப்ரபந்தங்களுக்கேற்றம், 1. இயற்றினவர், 2. நூல், 3. விஷயம், 4. ஸம்ப்ரதாயம் இவை களின் ஏற்றத்தினாலென்று சான்றோருரைப்பர். இந்நான்கின் சீர்மையை முறையே:- 1. வக்த்ரு வைலக்ஷண்யம், 2. வசன வைலக்ஷண்யம், 3. விஷய வைலக்ஷண்யம், 4. ஸம்ப்ரதாய வைலக்ஷண்யம் என்று சாத்திரஜ்ஞர் கூறுவர். இந்நான்கும் ஸ்வாமியின் கிரந்தங்களுக்குண்டு. இதை அடைவே விளக்குகிறோம்.

#### வக்த்ரு வைலக்ஷண்யம்

ஸ்வாமி திருவேங்கடமுடையானினவதாரம். இவ்வம்சம், ''ரஹஸ்யத்ரய ஸாரோயம் வேங்கடேச விபஸ்சிதா'' என்ற ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தினிறுதி ச்லோகத்தில் 'வேங்கடேச விபஸ்சிதா' என்றவிடத் தில் ஸூசிதம் 'ஸோச்நுதே ஸ ப்ரும்ஹணா விபஸ்சிதா'' என்ற ச்ருதியில் பரப்ரும்ஹத்தைச் சொல்லுமிடமான ''ப்ரும்ஹணா விபஸ்சிதா'' என்ற ப்ரயோகத்தையனுசரித்து ''வேங்கடேச விபஸ்சிதா'' என்று பதப்ரயோகம் பண்ணியிருப்பதே காரணமென்று பெரியோர் பணிப்பர். மேல் தோற்றத்திற்கு வேங்கடநாதனென்கிற அபிஜ்ஞனால் ரஹஸ்யத்ரய ஸார க்ரந்தம் செய்யப்பட்டுள்ளதென்று பொருளேற்படினும் உதாஹரித்த ஸ்ரீஸூக்தியின் ஆழ்பொருள் தன்னவதார ரஹஸ்யத்தை உணர்த்துவதே.

இவ்வம்சம் ஸ்வாமியின் மற்றோர் க்ரந்தத்தாலும் சிலாலிகிதமாய்த் தேறும். விளக்குகிறோம் கேண்மின். தத்வமுக்தாகலாபம் என்றொரு க்ரந்தமுண்டு. அது ஸ்வாமியின் க்ருதிகளிலொன்று. அதில் ''இத்தம்

ஸ்ரீ வேங்கடேச: ச்ருதமமத ஜகந்மூலகந்தம் முகுந்தம்'' என்று தொடக்கமுள்ள ச்லோகமொன்றுண்டு. அதற்குத் தாமே வ்யாக்யானமிடுகிறார் ஸ்வாமி. அவ் வ்யாக்யாநத்திற்கு ''ஸர்வார்த்த ஸித்தி'' என்று நாமகரணம். அதில் ப்ரக்ருத ச்லோகத்திற்கு வ்யாக்யானமிடுகையில் ''இவ்வாறாகச் செய்யப்பட்ட தத்வ முக்தாகலாப க்ரந்தத்திற்கு, வக்த்ரு வைலக்ஷண்யத்தையும், ஸம்ப்ரதாய வைலக்ஷண்யத்தையும், விஷய வைலக்ஷண்யத்தையும் ''இத்தம் ஸ்ரீவேங்கடேச'' என்கிற ச்லோகத்தில் சொல்கிறோம், என்றவதாரிகையிட்டு, மேல் ''ஸ்ரீவேங்கடேச இதி வக்த்ரு வைலக்ஷண்யம்'' என்றோர் பங்க்தி படிதமாயுள்ளது. இந்த ச்லோகத்தில் ஸ்ரீ வேங்கடேச: என்ற பதத்தால் க்ரந்தகர்த்தாவின் வைலக்ஷண்யம் அதாவது தனிச் சிறப்பு பேசப்பட்டதென்று இதன் பொருள். தேசிகன் திருவேங்கடமுடையானினவதாரம் என்றிசைந்தால் தான் இப்பங்க்தி சாலப் பொருந்தும். அதாவது க்ரந்தகர்த்தாவான தேசிகனுக்கேற்றம் சொன்னதாகும். வேங்கடேசன் என்ற நான் செய்தது என்று கூறிக் கொள்வதாகப் பொருளுரைப்பதில் பலனில்லை. சுவையில்லை. விவக்ஷித சித்தியில்லை என்பது வசன சைலியறிந்தோர்க்குக் கண்கூடு.

இவ்வர்த்தத்தையே த்ருடீகரணம் செய்கிறது ''அன்றிவ்வுலகினையாக்கி அரும் பொருள் நூல் விரித்து, நின்று தன்னீள் புகழ் வேங்கட மாமலை மேவிப் பின்னும், வென்றிப் புகழ் திருவேங்கடநாதனெனுங் குருவாய், நின்று நிகழ்ந்து மண்மேனின்ற நோய்கள் தவிர்த்தனனே''' என்ற பிள்ளையந்தாதிப் பாசுரம்.

**வசன வைலக்ஷண்யம்**

ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ''மனு வ்யாஸ ப்ராசேதஸ பரிஷதர்ஹா க்வசிதியம் ஸுதா ஸிக்தா ஸூக்திஸ் ஸ்வயமுதய மன்விச்சதி ஜனே ந நிருந்த்ய: கே?'' என்று ஒரு பத்யமுள்ளது. அதில் தம் ஸூக்தியை ''ஸுதாஸிக்தா'' (அமிருதத்தில் ஊறினது) என தாமே ஸாதித்திருப்பதால் சொல் மாதுர்யம் வ்யக்தம். மேலும் ஆசார்ய க்ருத்யாதிகாரத்தின் இறுதியில், ''அப்புள்ளாரடியேனைக் கிளியைப் பழக்குவிக்குமாப் போலே பழக்குவிக்க... பேசுவித்த பாசுரங்கள்'' என்ற ஸூக்தியில் கிளி திருஷ்டாந்தத்தாலும், ''பாசுரங்கள்'' என்று தம் பாஷணங்களைப் பேசியிருப்பதாலும், தம்பாஷணம் சுக (கிளி) பாஷணம் போல் போக்யமென சித்திப்பதால் வசன வைலக்ஷண்யம் நிரூபிதமாயிற்று.

**விஷய வைலக்ஷண்யம்**

''தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய்ப் போருவது?'' என்று இவரால் பெரிய ரஹஸ்யத்தில் தத்வத்ரய சிந்தநாதிகாரத்தில் வசனிக்கப்பட்டுள்ளதால், இவரால் பரிக்ரு ஹீதார்த்தங்கள் ப்ரமாண சித்தங்கள். தாந்தோனின படி லபித்தனவன்று எனத் தேறுவதால் விஷய வைலக்ஷண்யமும் நிர்விவாதம்.

**ஸம்ப்ரதாய வைலக்ஷண்யம்**

ஆசார்யக்ருத்யத்தில் ''வேதாந்தோதயன ஸம்ப்ரதாயமான மடப்பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே தாங்கேட்டருளினபடியே கிடாம்பி அப்புள்ளார் அடியேனை கிளியைப் பழக்குவிக்குமாப் போலே பழக்குவிக்க அவர் திருவுள்ளத்தில் இரக்கமடியாக பெருமாள் தெளியப் பிரகாசிப்பித்து மறவாமல் காத்துப் பிழையறப் பேசுவித்த பாசுரங்கள்'' என்று ஸ்வாமியின் பணிப்பு. இங்கு ''வேதாந்தோதயனர் எனப்பட்டவர் கிடாம்பி ஆச்சான். அவருக்கே மாறு பெயர் மடப்பள்ளியாச்சான் என்பது. இம் முழுப்பெயரே ''மடப்பள்ளி'' என்ற ஏகதேசத் தாலிங்கு உணர்த்தப் படுகிறது. கிடாம்பியாச் சானுக்கு, ஸ்ரீபாஷ்யகாரர் திருமேனியிலிருக்கும் பரிவைக் கண்டருளி, திருக்கோட்டியூர் நம்பி, பெரிய நம்பி இவர்களால் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு மாதூகரம் ஸமர்ப்பிக்கும் கைங்கர்யத்தில் நியமிக்கப்பட்டிருந்த படியால் ''மடப்பள்ளியாச் சான்'' என்ற திருநாமமேற்பட்டது இவருக்கு. இதனால் இவருக்கிருக்கும் ஆசார்ய பக்தியும், ஆசார்ய கைங்கர்ய நிஷ்டையும், அந்தரங்கராயிருந்தமையினால் ஸாம்ப்ரதாயிக ரஹஸ்யார்த்த உபதேசங்களுக்குத் தகுந்த பாத்ரமானமையும் த்யோதிதம். ஆகையால் மடப்பள்ளி ஸம்ப்ரதாயம் ஸ்ரீபாஷ்யகாரருக்கு மிகவும் திருவுள்ளமுகந்த ஸம்ப்ரதாயமெனத் தேறும். அச்சம்ப்ரதாயமே தமக்குப் ப்ராப்தமானபடி பேசப்பட்டிருப்பதால் ஸம்ப்ரதாய வைலக்ஷண்யமும் ப்ரதிஷ்டிதம்.

இப்படியாக ஸ்வாமி ப்ரபந்தங்களுக்கு வைலக்ஷண்ய சதுஷ்டயமும் ஸித்தமாயிற்று.

**ப்ரபந்தாவதாரப்ரயோஜனம்**

''உபகாரஸங்க்ரஹம்'' என்ற ப்ரபந்தத்தின் உபாந்த்யத்தில்,

*அயமப்யபரோ மஹோபகார:*
*கலிதோஷாவிலசேதஸாம் நராணாம் |*
*கருணாஜலதிர் யதேஷ தேவ:*
*ப்ரதயாமாஸமயா நிஜோபகாரான் ||*

என்று ஒரு ச்லோகமுள்ளது. ''மோஹனார்த்தமாக இராமல், லோகோஜ்ஜீவநார்த்தமாகவே தம்மைக் கொண்டு, ஈச்வரன் தான் செய்யும் உபகாரங்களை ப்ரபந்த முகமாக வெளியிட்டிருக்கிறான். உலகத்திற்கு ஈச்வரன் செய்யும் மஹோபகாரங்களில்

இதுவும் (தம்மைக் கொண்டு ப்ரபந்த முகமாக வெளியிட்டிருப்பதும்) ஒன்று என்று இந்த ச்லோகத்தின் தாத்பர்யம். இதனால் இவருடைய ப்ரபந்தாவதார ப்ரயோஜனம் லோகோஜ்ஜீவனமே என்று ஊர்ஜிதமாயிற்று.

**ஓரொன்றேயமையும்**

**ஏகம் தத் ஸர்வஸித்யை கலயத ஹ்ருதயே தத்வ முக்தாகலாபம்** என்று ஸ்வாமியின் தத்வமுக்தாக லாபத்தில் உள்ளதோர் ஸூக்தி. தத்வமுக்தாகலாபம் = தத்வமுக்தாகலாபமென்ற, ஏகம் = ஒரு கரந்தத்தை, ஹ்ருதயே கலயத ஹ்ருதயத்தில் நிறுத்திக் கொள்ளுங்கள். தத் = அவ்வோர் க்ரந்தமே ஸர்வஸித்யை = ஸகலத்தையும் ஸாதித்துத்தர வல்லது. அதாவது வாதிகளை வெல்லவும் பயன்படும், புருஷார்த்தத்தைப் பெறவும் பயன்படும் என்றிதன் பதவுரை. இதனால் ஸ்வாமியின் ப்ரபந்தங்களில் ஓரொன்றேயமையும் வாழ்ச்சிக்கென ஸித்தாந்திதம்.

**இங்கில்லாதது எங்குமில்லை**

''யந்தாஸ்மின் க்வாபி நைதத்'' என்று முன் சொன்ன தத்வமுக்தா கலாபத்தின் ஓர் கண்டம். அஸ்மின் = இந்த ப்ரபந்தத்தில். யத் = எந்த அம்சம். ந = விசாரிக்கப்படவில்லையோ. ஏதத் = இவ்வம்சம், க்வாபி = பிற ஸமய க்ரந்தங்களிலெதிலும், ந = விசாரிக்கப்படவில்லை என்றிதன் பதார்த்தம். இதனால் இங்கில்லாதது எங்குமில்லை எனத் தெளிவாகும்.

**தெளியாதாரென்றுந் தெளியார்**

**ஏவமபி யெ முஹ்யத்தி தே முஹ்யந்த்யேவ நகலு ஸஹஸ்ரைரபி ஸவிலகும்பைர் பலிபுஜ: ப்ரக்ஷால்யமா நா வலர்க்ஷதாம் ப்ரதிபத்யந்தே** என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்திலோர் வாக்யம். இதன் கருத்து:- ப்ரமாணங்களுக்கு பாதம் வாராமற்படி நாம் தத்வ நிரூபணம் பண்ணியிருக்கச் செய்தேயும் தத்வநிஷ்கர்ஷம் கொள்ளாமல் (மோஹித்தானேயாகில் அவ்வதிகாரி என்றென்றைக்கும் மோஹித்திருக்க வேண்டியவனே. குடங்குடமாய் நீர் வார்த்து, தேய்த்து குளிக்கச் செய்திட்டாலும் கருமை நீங்கி வெண்மையடையுமோ வாயஸம்? (காக்கை). அதன் நிஜஸ்வபாவம் போகாதல்லவா? என்பதே. இதனால் தெளியாதாரென்றுந் தெளியார் என்று நிராபாத ஸித்தம்.

**பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே**

*நிச்சேஷாம் வஸ்து வ்ருத்திம் நிபுணமிஹ மயா ந்யஸ்யதா க்வாபி கோணே யத்ரோதாஸி த்விதாவா ஸமகணி கஹநே ஸம்மதே ஸன்மதீநாம் |*
*நிஷ்க்ரஷ்டும் கஸ்சிதன்ய: ப்ரபுரிஹ பகவல்லக்ஷ்மணாசார்ய முத்ரா மக்ஷூத்ராசார்யசீக்ஷா சதகுணித மதேரப்ரமத்தாந் த மத்த:||*

என்று தத்வ முக்தாகலாபத்தில் கர்ஜனம் செய்கிறார் நம் தார்க்கிக சிங்கம். இதன் பொருள்:- ''இக்கிரந்தத்தில் வஸ்துக்களின் தாத்விக ஸ்திதியை மிகவும் அவதானத்துடன் ஸ்தாபித்துள்ளேன். தேவையில்லாத விஷயத்தில் நிர்த்தாரணம் செய்யாமலும் விட்டிருக்கிறேன். ப்ராஜ்ஞர்களுக்கும் அபிப்ராய பேதமுள்ள ஸூக்ஷ்மமான விஷயத்தில் இப்படி சில ப்ராஜ்ஞருரைப்பர். வேறுவிதமாக சில அபிஜ்ஞரறுதியிடுவர் என்று மத பேதங்களை மட்டும் காண்பித்து அத்துடன் நின்றுவிட்டுமிருக்கிறேன். இந்த இடங்களில் என்னால் நிரூபிக்கப்பட்ட வண்ணமே வஸ்துக்களைக் கொள்ளவேணும். வேறு வழியில் செல்லலாகாது. ஏனெனில் ஸ்ரீபாஷ்யகாரரமைத்துள்ள சித்தாந்த தளங்களின் அடையாளங்களைப் புரிந்து கொள்ள என்னதளவு திறமை யாருக்குண்டு? ஸதாசார்ய சிக்ஷையால் ஜ்ஞானத்தை நூறு மடங்காக பெருக்கிக் கொண்டவனல்லவோ யான்?'' என்பதே. இதனால் பேசியிருப்பனகள் போர்க்கவும் பேராவே என்று தீரும்.

**மாத்ஸர்யமுள்ளோரும் விஸ்மிதராவர்**

*மௌனம் பிப்ரது மத்ஸரேண நமிதாஸ் தூர்ணம் த ஏவ த்ருவம்*
*காலோங்நித்ர கதம்பகோலவபுஷ: கம்பஸ்புரன் மௌலய |*
*கிஞ்சித் வ்ரீடித குஞ்சிதாக்ஷமவசாத் த்தாந தத்தாநநா:*
*ப்ரஸ்தோஷ்யந்த்யவதிம் ப்ரயோக பதவீ ஸாரஸ்ய ஸாரஸ்ய ந: ||*

என்று ஸங்கல்ப ஸூர்யோதய ச்லோகம் இதனர்த்தம்:- நம் விஷயத்தில் அஸூயை நிறம்பினவர்கள் இந்நாடகத்தை ரஸிக்க விரும்பார்கள். கண்ணெடுத்துப் பார்க்கவுமிசையார்கள். வாய்திறந்து ஓர் சொல் உதிர்க்கவும் மாட்டனர். இவ்வதிகாரிகளே சில வினாடிகளில் இந்நாடகத்தின் அற்புத ப்ரயோக விசேஷத்தால் புளகாங்கிதராகி சிர: கம்பனம் பண்ணி இந்நாடகத்தையே ரஸிக்கத் தொடங்குவர்.

மேலுமிதில் இழிய இழிய இந்நாடக ப்ரயோகத்தின் போக்யதையால் தன் வசமற்று இதையும் நம் தீய குணத்தால் உதாசீனம் செய்தோமே! என்ற அனுதாபத்துடன் லஜ்ஜிதர்களாய் ஓரக் கண்ணால் தலையை நிமிர்ந்து பார்க்கவும் செய்வர்கள். பின்னும் சிறிது க்ஷணத்தில் நம்நாடக ப்ரயோகத்தின் ஸரளமான ஸரணியினுடைய ரஸத்தை மிகவும் சிலாக்கிக்கவும் தொடங்குவார்கள். இது ஸத்யம். பாம்புக் குடத்தில் கையிட்டுஞ் சொல்லுவோம் என்பது. இதனால் மாத்ஸர்ய முள்ளோரும் விஸ்மிதராவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இப்படி மிகப் பெருமை வாய்ந்த நமதாசார்ய மணியான தூப்புல் மணி விஷயத்தில் ''போற்றியுகப்பது'' என்ற முறையில் கிஞ்சித்கரித்து நாம் க்ருதார்த்தர் களாவோமாக!

ஶ்ரீ:



## With Pranams:

**Priya & T.R. Murali,**
1 - 606, Brigade Metropolis,
Whitefield Main Road, Mahadevapuram
Bengaluru 560 048.

**SVDD thanks Smt. Priya & Sri T.R. Murali**
for sponsoring this month's issue of Desika Sandesam

ஸ்ரீ:








திருப்பாண் ஆழ்வார் திருநக்ஷத்ரம்












திருக்கார்த்திகை தீபோத்ஸவம்



ஸ்ரீ:

கண்ணுக்கினியன



## திருக்கார்த்திகை தீபோத்ஸவம்











தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம்



கண்ணுக்கினியன



தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம்








**ஆண்டாள் நீராட்ட உத்ஸவம்**







க்ருத்திகா பாராயணம் பூர்த்தி





ஸ்ரீ:




ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் பரிசளிப்பு விழா

ஸ்ரீ:

# ஆதிப்பிரானை அறிந்த ஆழ்வார்பிரான்


ஸ்ரீ உ.வே. அழிசூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

திருமழிசைப்பரன் இத்தாரணியின் துயர்தீர்க்கத் திருமழிசை திவ்ய க்ஷேத்ரத்தில் திருவவதரித்த தைம்மக நன்னாளையொட்டி, பரதேவதா பாரமார்த்யத்தை அருளிய இவ்வாழ்வார்பிரானின் இடங்கொண்ட கீர்த்தியை, அவர் காட்டும் வழியிலே அநுபவிப்போம்.

பரதேவதா பாரமார்த்யம் என்பது மிக உயர்ந்த தேவதையின் உண்மைநிலை. இந்த பரதத்வ நிர்ணய விஷயத்தைக் காண்பிப்பதில் உருவின வாளை உரையிலிடாதவர் என்று நம் ஆசார்ய ஸார்வபௌமர்களால் போற்றப்படுபவர் இவ்வாழ்வார். ஸ்வாமி ஸ்ரீவேதாந்த தேசிகனார் இவரை 'மாயோனல்லால் தெய்வம் மற்றில்லை' என்கிற வேதச்செழும்பொருளை நமக்கு அளித்து மஹோபகாரம் செய்தவர் என்று கொண்டாடுகிறார். விஷ்ணு பாரம்யத்தை மற்றய ஆழ்வார்கள் அருளிச்செய்திருந்தும் இவரை அஸாதாரணமாக இவ்வாறு கூறக் காரணம், ஸ்ரீமந்நாராயணனின் பரத்வ நிஷ்கர்ஷணமே இவரின் இரு ப்ரபந்தங்களான நான்முகன் திருவந்தாதி மற்றும் திருச்சந்தவிருத்தத்தில் ஆத்யந்தம் பூரணமாக உள்ளது என்று ஸாதிக்கிறார் ஸ்வாமி.

வேதங்களின் முக்யபொருளான பரதேவதா நிஷ்கர்ஷணத்தை, அவ்வேதங்களைக் கொண்டு இவ்வாழ்வார் அருளியுள்ளதைப் பார்த்தால் மட்டுமே ஸ்வாமி தேசிகனின் திருவுள்ளச் சீர்மையை நம்மால் நன்கு அநுபவிக்க முடியும். ஆனால் அது அவ்வளவு ஸுலபமன்று. வேதங்களில் சொல்லப்பட்ட பொருளனைத்தும் அறிந்து, பிறகு அதன் செழும்பொருளைத் தெளிவது மிகக்கடினம். இப்பொழுது என் செய்வதெனில், ஒரு ஸுலபமான உபாயம் கைக்கொள்வோம்! ஆம், வேதஸாரம் என்று போற்றப்படும் ஸ்ரீநம்மாழ்வாரின் திருவாய்மொழி வேதாந்த விழுப்பொருளைக் காட்டுகிறதன்றோ! ஆக, அவர் அருளிய ப்ரகாரத்தில் மழிசைப்பிரானின் பரதத்வ ஸ்தாபனத்தை அநுபவித்தோமேயாகில் நம் அவா ஸார்த்தகமாகுமே! தொண்டீர் எல்லீரும் வாரீர், இவ்விரு ஆழ்வார்களின் வாங்மயத்தால், வேதாந்த ஆசிரியன் வழி நடத்த ப்ரஹ்ம ரஸத்தைப் பருகுவோம்!

''காரணம் து த்யேய:'' என்கிறது சாஸ்த்ரம். யார் இந்த ஜகத் ஸ்ருஷ்டி (படைத்தல்), ஸ்திதி (காத்தல்) மற்றும் ப்ரளயத்துக்குக்



(அழித்தல்) காரணமோ, யாரிடமிருந்து இந்த ஜகத் உண்டாகிறதோ, பிறகு யாரிடம் லயத்தை அடைகிறதோ, அவனே பரதேவதை, அவனே நாம் உபாஸிக்க வேண்டியவன். அவன் ஸாக்ஷாத் திருவுடைத் தேவனான நாராயணனே என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் பல காரணங்களை அடுக்கிக் காட்டுகிறார் ஸ்வாமி தேசிகன். இவை முழுவதுமாக ஸ்ரீநம்மாழ்வாரின் 'ஒன்றும் தேவும்' பதிகத்தை ஒற்றி அமைந்துள்ளது. இவை அனைத்தும் ஸ்ரீபக்திஸாரரால் (திருமழிசையாழ்வார்) விஸ்தரிக்கப்பட்டுள்ளது. விரிவுக்கு அஞ்சி ஒரு சில அம்சங்களை மட்டும் இங்கு அநுபவிப்போம்.

**1. எம்பெருமான் காரணம், மற்றய ப்ரம்ம ருத்ராதிகள் கார்யமாய் இருப்பவர்**

'ஒன்றும்தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று நான்முகன் தன்னோடு தேவருலகோடு உயிர் படைத்தான்' என்று ச்ரிய: பதியான நாராயணனே மற்றய தேவதைகளையும், அவர்களின் லோகங்களையும், அவற்றுக்கு ஆதாரமாயுள்ள ப்ரஹ்மாண்டத்தையும் ஸ்ருஷ்டித்தான். ப்ரளய காலத்தில் இவை எல்லாம் அழிந்து, ஜீவாத்மாக்கள் எம்பெருமானிடமே லயத்தை அடைகின்றன. இவ்வாறு உயிர்களுக்கெல்லாம்

தாயாய் விளங்கும் ஆதிப்பிரான் நிற்க மற்றைத் தெய்வங்களை நாடுகிறீர்களே! என்று ஜீவர்களின் துர்தசையைக் கண்டு வ்யஸனப்படுகிறார் ஆழ்வார் தலைவனாம் ஸ்ரீநம்மாழ்வார்.

இவ்விஷயங்களை அப்படியே நம் ஆழ்வார்பிரான் தம் ப்ரபந்தங்களின் தொடக்கத்தில் அறுதியிட்டுக் கூறுகிறார். 'நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்' என்று நான்முகன் திருவந்தாதியிலும், 'பூநிலாய ஐந்துமாய் புனற்கண்நின்ற நான்குமாய்' என்று ப்ரக்ருதியிலிருந்து மஹத், அஹங்காரம், ப்ருதிவ்யாதிகள், குணங்கள், இந்த்ரியங்களின் ஸ்ருஷ்டி க்ரமத்தைத் திருச்சந்தவிருத்தத்தில் விசதமாகக் காண்பித்து, லக்ஷ்மீபதியே ஆதியான வானவர்க்கும் ஆதியான ஆதி என்கிறார்.

ப்ரளய காலத்தில் ஓர் பாலனாகி, ஞாலமேழும் உள்ளொடுக்கி வைத்து, மீண்டும் உலகை தன்னுளேபிறக்கச் செய்யும் மஹோபகாரங்களை எண்ணித் தேருங்கால் (ஆராய்ந்தால்), தேவன் ஒருவனே என்று புலப்படும், அந்த ஆலிலைத் துயின்ற ஆதிதேவனே ஸர்வகாரணன், அவனே வானவர்தம் மெய்ப்பொருள், அவனே நமக்குத் தஞ்சம் என த்ருடீகரணம் பண்ணுகிறார்.

2. **எம்பெருமான் அப்ராக்ருதமாயும், சுபாச்ரயமாயுமுள்ள திருமேனி உடையவன்**

லிங்கார்ச்சனத்தை உத்தேச்யமாக ப்ரதிபாதிக்கிற தாமஸ புராண நிஷ்டர்களையும், குத்ருஷ்டிகளையும், சமணர்களையும், சாக்யர்களையும், வெறும் குதர்க்கம் செய்பவர்களையும் கண்டித்து, எல்லோரும் ஆச்ரயிக்கும்படியாக ஸகல தேஜஸ் பொருந்திய திவ்யமங்கள ரூபத்துடன் எழுந்தருளியிருக்கும் 'பொலிந்து நின்ற பிரான் கண்டீர் ஒன்றும் பொய் இல்லை போற்றுமினே' என்கிறார் ஸ்ரீநம்மாழ்வார். அந்த வாதிகளைப் பார்த்து அவர்கள் ஆச்ரயிக்கும் தெய்வங்களையும் ஸ்வாதீனம் பண்ணிய திருமேனி சோபையையுடையவன் எங்கள் நாதன் என்கிறார்.

திருமழிசையாழ்வார், நாகத்தணைக்குடந்தை, வெக்கா, திருஎவ்வுள், அரங்கம், மாமயிலை மாவல்லிக்கேணி என ஆச்ரித ரக்ஷணார்த்தம் வீற்றிருக்கும் பரவாஸுதேவன், நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் என் நெஞ்சுளே என்று அப்ராக்ருதமாயும், சுபாச்ரயமாயுமுள்ள திருமேனியை நம் சித்தத்தில் நிலை நிறுத்துகிறார். மேலும், மற்றைய தேவர்களோ, காணிலும் உருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார், பேணிலும் வரம்தர மிடுக்கிலாதவர்கள் என்று இவர்களை ஆச்ரயிப்பவர்களை நிந்தித்து, பின்பு அவர்களுக்கு உபதேசிக்கிறார், எம்மாதிபால் ஆதிப்பிரானே பிறப்பெனும் பிணக்கை அறுக்க வல்லவர் என்று!



3. **எம்பெருமான் ப்ரம்ம ருத்ராதி தேவதைகளை சரீரமாகக் கொண்டவன். அவன் சரீரி**

அந்த ஆதிப்பிரான் எவ்வாறு உள்ளான் என கூறுகிறார் கேளுங்கோல்! ப்ரஸித்த ஆறு சமயங்கள் திரண்டு வந்தாலும், தன் விஷயத்தில் அளந்து காண்டற்கு அரியனாகி நிற்கிறான். ஆம்! எத்தேவும், எவ்வுலகங்களும் மற்றுமுள்ள சித், அசித் வர்கங்கள் என அனைத்தையும் தன் ஸ்வரூபத்தில் வைத்துள்ள மூர்த்தியாக நிற்கிறானாம். ஸமஸ்த சேதனாசேதனங்களைத் தன் சரீரமாகக் கொண்டு தான் அதற்கு ஆத்மாவாய் இருக்கிறான். நம் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் மேல்விளக்காய் நிற்கும் விஷயமாகிய சேதனாசேதனங்களுக்கும் எம்பெருமானுக்கும் உள்ள சரீர-ஆத்மபாவ ஸம்பந்தத்தை இங்கு பறைசாற்றுகிறார் ஸ்ரீசடகோபன்.

ஸ்ரீபக்திஸாரரும், 'நன்றாக நான் உன்னை அன்றி இலேன் கண்டாய் நாரணனே நீ என்னை அன்றி இலை!' என்று எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள அப்ருதக்ஸித்த ஸம்பந்தத்தை நாராயண சப்தார்த்தம் கொண்டு ஒரே வரியில் ஸாதிக்கிறார். மேலும் 'நீயே உலகெல்லாம் நின்னருளே நிற்பனவும், நீயே தவத்தேவதேவனும் (ப்ரஹ்ம, ருத்ராதி தேவர்கள்), நீயே எரிசுடரும், மால்வரையும், எண்திசையும், அண்டத்து இருசுடருமாய (ஸூர்ய சந்த்ரர்களான தேஜஸ்) இறை' என எல்லாவற்றுக்கும் அந்தர்யாமியாய் எம்பெருமான் எழுந்தருளியுள்ள இருப்பை விவரிக்கிறார்.

**4. எம்பெருமான் சேஷீ, ஸ்வாமி; ப்ரஹ்ம ருத்ராதி தேவதைகள் அவன் தாஸர்கள், அவனுக்கு அவனுக்கு அடிமைத் தொழில் செய்பவர்கள்**

இவ்வாறு, பேசநின்ற சிவனுக்கும் பிரமன்தனக்கும் பிறர்க்கும் நாயகனான எம்பெருமான், சிவனுக்கு ப்ரஹ்மகபாலத்தை நிவ்ருத்தி செய்தமையையும், குறிய மாணுருவு கொண்ட வாமனனாய் தேவர்களின் நஷ்ட ஐச்வர்யங்களை மீட்டுக் கொடுத்தமையையும், குடக்கூத்தனான ஸ்ரீகண்ணனாய் ஆச்சர்ய லீலைகள் செய்தருளி ஸாதுக்களையும் தர்மங்களையும் ரக்ஷித்தமையையும் நினைந்துருகி, அந்த தேவாதிதேவனே தற்பொழுது திருக்குருகூரதனுள் ஆதிப்பிரானாக நம்மை ரக்ஷிக்க நிற்கிறான். அவனுக்கு ஆட்செய்வதே சீரியதாயும் உசிதமாயுமுள்ள புருஷார்த்தமாகும் என்கிறார். அப்படி ஆட்செய்து அந்த ஆழிப்பிரானையே சேர்ந்தவன் இந்த வண்குருகூர் நகரான் என்று தலைக்கட்டுகிறார் ஸ்ரீ ஆழ்வார்.

கடிக்கமல நான்முகனும், கண் மூன்றத்தானும் கமலங்களால் அர்ச்சித்தும், சத்ர-சாமராதிகளைத் தாம் குவித்துக் கொண்டும், திருவாராதனம் செய்தும் திருவேங்கடவனின் திருவடிகளை அநவரதம் ஏற்றுகின்றனர். இப்படி, 'தேவதேவர்களுக்கும் ஸ்வாமியான எம்பெருமானே! ஸ்ருஷ்டி காலத்தில் யாதுமில்லா அன்று, எல்லா உயிர்க்கும் ஆக்கை கொடுத்தளித்த கோனே (ஸ்வாமியே)! குணப்பரனே!, நீ செய்த இந்த காப்பு (ரக்ஷணம்) மறந்தறியேன்!' என்கிறார் மழிசையர்கோன். மேலும், தொல்லைமால் தன் நாமம் ஏத்துவதே தமக்குத் தொழிலென்றும், அவனைத் தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போது போக்கினேன் என்றும் திருவிருந்தமார்வன் சிரீதரனுக்குத் தாம் ஆள் ஆனதைக் கூறித் தலைக்கட்டுகிறார்.

**பரதத்வ ஜ்ஞான தானம்**

வேதமாகிய ஸமுத்ரத்தில் இறங்கி, நமக்கு உத்தேச்ய மில்லாததான மற்றைச் சமயங்கள் பல தெரிந்து, அவை அஸாரம் என்று அங்கேயே விட்டுவிட்டு, பின்பு அக்கடலின் ரத்னங்களான வேதாந்தங்களை நன்கு அறிந்துகொண்டு, அதிலும் மிக உயர்ந்த ரத்னங்களான வேதாந்த விழுப்பொருளையும், அதன் மேல்சோதியான பரதத்வ ஜ்ஞானத்தையும், அந்த வேத ஸாகரத்திலிருந்து வெளிக்கொண்டுவந்து நமக்கு அளிக்கிறார் ஸ்ரீ திருமழிசை ஆழ்வார்.

*இனிஅறிந்தேன் ஈசற்கும்நான்முகற்கும்தெய்வம்*
*இனிஅறிந்தேன் எம்பெருமான்! உன்னை*
*இனிஅறிந்தேன் காரணன்நீ, கற்றவைநீ, கற்பவைநீ*
*நற்கிரிசை நாரணன்நீ, நன்கறிந்தேன்நான்!*

என்று ஸர்வகாரணனான ஆதிப்பிரானைத் தாம் நன்கு அறிந்த ப்ரகாரத்தின்படி நமக்குரைக்கிறார் ஆழ்வார்பிரான்.

மேலும், அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய் பல்பிறப்பொழித்த அரங்கமாநகருளான் திருவடித் தாமரைகளிலே தமது மனம் வாட்டமின்றி நிலை நின்றது என்றும், அதனால் அந்த மேகவண்ணன் தம்முள் புகுந்து, தம் பல்பிறப்புகளையும், துன்பங்களையும் ஒழித்து, அவன் மன்னுசோதியான மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையே அருளினான் என்றும், அப்படிப்பட்ட பரம க்ருபாலுவான எம்பெருமானின் குணரஸத்தைத் தாம் ஆஸ்வாதனம் செய்தபடிக்கு நமக்கும் அளித்து அருள்கிறார்.

## தை மாதத்தில் முக்கிய உத்ஸவங்கள்

| |
|---|
| **தை வருஷப்பிறப்பு, ஸங்க்ராந்தி**<br>ஜனவரி 14 (செவ்வாய்) |
| **கனு உத்ஸவம்**<br>ஜனவரி 15 (புதன்) |
| **திருமழிசை ஆழ்வார் திருநக்ஷத்ரம்**<br>ஜனவரி 17 (வெள்ளி) |
| **இராப்பத்து சாற்றுமுறை, நம்மாழ்வார் திருவடித்தொழல்**<br>ஜனவரி 19 (ஞாயிறு) |
| **இயற்பா சாற்றுமுறை, கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்**<br>ஜனவரி 20 (திங்கள்) |
| **தேசிக ப்ரபந்த சாற்றுமுறை**<br>ஜனவரி 21 (செவ்வாய்) |
| **திருப்பல்லாண்டு தொடக்கம்**<br>ஜனவரி 22 (புதன்) |
| **பரிவேட்டை உத்ஸவம்**<br>ஜனவரி 26 (ஞாயிறு) |
| **வனபோஜன உத்ஸவம்**<br>பிப்ரவரி 1 (சனி) |
| **ரத ஸப்தமி**<br>பிப்ரவரி 4 (செவ்வாய்) |
| **தை புஷ்யம்**<br>பிப்ரவரி 11 (செவ்வாய்) |

ஸ்ரீ:

# பாதுகா பட்டாபிஷேகமும் ராஜ்ய பரிபாலனமும் (3)

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

**ராம ராஜ்யமா அல்லது பாதுகா ராஜ்யமா?**

பாதுகா தேவியின் ராஜ்யம் ப்ரஜைகளின் எல்லையில்லா ஸந்தோஷத்திற்குக் காரணமாகவும் அவர்களுக்கு ரக்ஷகமாகவும் அமைந்ததையும், அண்டை தேசத்து அரசர்களை தன் வீரத்தாலும் காருண்யத்தாலும் வசீகரித்ததையும், த்ரேதாயுகத்தில் க்ருதயுக தர்மத்தை ஸ்தாபித்ததையும் சென்ற பகுதியில் பார்த்தோம்.

இவள் அரசாட்சி ராமனுக்கு எப்படி உபகாரமாக அமைந்தது?

ஸ்ரீராமன் தண்டகாரண்யம் சென்றடைந்து எதிரிகளை ஒழித்தது எல்லாமே பாதுகாராஜ்யத்தின் பெருமையினால்தான் என்று நிர்தாரணம் பண்ணுகிறார் ஸ்வாமி தேசிகன்.

*பத்ராஸநம் சேத் பரிவ்ருத்தமாஸீத்*
*தேவி! க்ஷணம் தக்ஷிணதோமுகம் தே|*
*கதம் பவேத் காஞ்சந பாதரக்ஷே !*
*ராமஸ்ய ரக்ஷோ ம்ருகயா விஹார:|| [169]*

ஹே பாதுகா தேவி! நீ ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாமல் போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்? ராமன் காட்டிற்குச் சென்று ராக்ஷஸர்களை மிருகங்கள் போல வேட்டையாடினார் என்பது இல்லாமல் போயிருக்கும். நீ ஸிம்ஹாஸனத்தில் சக்ரவர்த்தியாக எழுந்தருளியிருந்து கொண்டு நல்ல ராஜ்ய பரிபாலனம் பண்ணுகிறாய். அதன் பலனாக நாட்டில் உள்ள மற்ற தர்மங்கள் எல்லாம் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. அதன் வெளிப்பாடே ராமன் ராக்ஷஸர்களை ஒழித்து கட்டியது என்று ரஸோக்தியாக அருளிச் செய்கிறார்.

ச்ரிய: பதியான எம்பெருமான் ராமனாக அவதரிக்கக் காரணம் என்ன? தேவர்களை ரக்ஷிப்பதாக ஸத்யம் பண்ணினான். ராக்ஷஸர்களை ஒழிக்க வேண்டும்; ராவணனை வதம் பண்ண வேண்டும்; தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டும். இது தேவகார்யமாயிற்றே.

நிற்க, ராவணன் படை என்ன ஸாதாரணமானதா? ராவணவதம் என்பது க்ஷண காலத்தில் ஸாத்யமாகுமா? எத்தனை ஆயிரம் படைகள் அவனிடம் இருக்கின்றன! இப்படியிருக்க ராமன் ஒன்றரை முஹூர்த்தத்தில் ஜனஸ்தானத்தில் பல்லாயிரம் ராக்ஷஸர்களை ஒழித்தார். அதேபோன்று இலங்கை சென்று ராவணனுடைய ஸைன்யம் முழுவதையும் மூன்றே நாட்களில் முடித்தார். அதுவும் ஒரு வானர ஸேனையை வைத்து க்கொண்டு இது எப்படி ஸாத்யமானது?

ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்:

*திவிஷதநுவிதேயம் தேவி! ராஜ்யாபிஷேகம்*
*பரத இவ யதி த்வம் பாதுகே! நாங்வமம்ஸ்தா: |*
*கதமிவ ரகுவீர: கல்பயேதல்பயத்ந:*
*த்ரிசதுர சரபாதைஸ் தாத்ருஶம் தேவகார்யம்|| [207]*

கதமிவ ரகுவீர: கல்பயேதல்பயத்ந: -- ராமன் ஒரு ப்ரயத்னமும் படவில்லை என்கிறார் நம் ஆசார்ய வள்ளல். இதற்கு காரணம் பாதுகாதேவியின் ஸங்கல்பம். பரதன் ராஜ்யபரிபாலனத்தை ஏற்காதபோது பாதுகாதேவியும் ஏற்காமல் போயிருந்தால் ராமனின் இந்த தேவ கார்யமானது எப்படி ஸாத்யமாகியிருக்கும்? பாதுகாதேவி ராஜ்ய ஸ்வீகாரம் பண்ணின பிறகு அவளுடைய ராஜ்ய பரிபாலனத்தின் ப்ரபாவத்தினாலும், மாஹாம்யத்தினாலும் இது ஸாத்யமானது. அஸுரர்களெல்லாம் ஒழிந்தார்கள், தர்மஸ்தாபனம் நடந்தேறியது. ஆக ராமனோடு ஸஞ்சாரம் பண்ணும்பொழுதும், அவனுக்கு பதிலாக ராஜ்யபரிபாலனம் பண்ணும்பொழுதும், மக்களையும், ராஜ்யத்தையும் ரக்ஷிக்கிறாள் பாதுகாதேவி.

முதலில் கூறியது போல ராஜ்யம் என்றாலே ஸ்ரீராம ராஜ்யம் தானே! பாதுகா ராஜ்யம் ராம ராஜ்யத்திற்கு மாற்றாக ஏற்பட்டதா? ஒன்றுக்கு மாற்றாக இன்னொன்று என்று சொன்னாலே அதில் ஒரு எதிர்பார்ப்பு இருப்பது உலக நியதி. ஆக ராமராஜ்யம் சிறந்ததா பாதுகாராஜ்யம் சிறந்ததா? ஸ்வாமி தேசிகனையே கேட்போம்!

ப்ரபாவத்திலும், ராஜ்ய பரிபாலனத்திலும் சிறந்தது ராமராஜ்யம், ஆனால் அனுக்ரஹத்தில் சிறந்தது பாதுகாராஜ்யமே என்று ஸ்தாபிக்கிறார் ஸ்வாமி தேசிகன்:

*வர்ஷாணி தாநி வ்ருஷளோ ந தபாம்ஸி தேபே*
*பாலோ ந கச்சிதபி ம்ருத்யுவசம் ஜகாம|*
*ராஜ்யே தவாம்ப! ரகுபுங்கவபாதரக்ஷே!*
*நைவாபரம் ப்ரதிவிதேயமபூத் ப்ரஸக்தம்|| [153]*

ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸ்ரீ ராம ராஜ்யத்தில் ஒரு தோஷம் சொல்லப்பட்டது:- சாஸ்த்ரத்திற்கு விருத்தமாக, ஆசார்ய முகமாக வேதாந்த அத்யயனம் பண்ணாத ஒருவர் பண்ணிய தபஸ்ஸினால் ஒரு சிசுவின் மரணம் ஏற்படுகிறது. தர்மத்திற்கு எதிரான இந்த கார்யத்தை செய்தவனை எம்பெருமான் ராமன் வதம் செய்து. மறித்த அந்த சிசுவை உயிருடன் மீட்டார். அந்த நிலைமையைச் சரி செய்தார்.

இப்படி சரி செய்ய வேண்டிய ஒரு ப்ரஸக்தியே பாதுகாராஜ்யத்தில் ஏற்படவில்லை, ஏனெனில்

தர்மத்திற்கு விரோதமான ஒரு கார்யத்தை இவள் ராஜ்யத்தில் யாரும் செய்யவில்லை. அதனால் பாதுகாராஜ்யம் உத்க்ருஷ்டமானது.

மேலும் ராமராஜ்யத்தில் எல்லாமே ராம ஆராதனமாக இருந்தது. புஷ்பங்கள், ரத்னங்கள், பழங்கள், கர்மங்கள் என்று எல்லாவற்றையும் மக்கள் ராமனிடத்தில் ஸமர்ப்பித்தார்கள்.

காட்டில் ரிஷிகள் பண்ணும் தபஸ்ஸில் ஆறில் ஒரு பங்கு ராஜாவிற்கு சென்று சேரும். அதேபோல ப்ராஹ்மணர்கள் மற்றும் பதிவ்ரதா ஸ்த்ரீகள் பண்ணும் கர்மங்களில் ஆறில் ஒரு பங்கு ராஜாவிற்குச் சேரும். இப்படி ராமன் இருக்கும்பொழுது அது பகவத் ஆராதனமாக மாறி அக்கர்மங்களின் ப்ரதிஸம்பந்தியாக ராமனே எழுந்தருளியிருந்தான். ஆனால் பாதுகா ராஜ்யத்தில் பகவத் ஆராதனம் என்பது பாகவத ஆராதனமாக மாறியது.

*ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோ: ஆராதநம் பரம்ந*
*தஸ்மாத் ஆராதநம் ப்ரோக்தம் ததீய ஆராதநம் பரம் நந*

''ஆராதனத்தில் சிறந்தது விஷ்ணுவினுடைய ஆராதனம். அதனைக் காட்டிலும் சிறந்தது அவனது பாகவதர்களின் ஆராதனம்'' என்று புராண வாக்யங்கள் உத்கோஷிக்கின்றன.

ராம ஆராதனம் சிறந்தது தான், இருப்பினும் அதனைக் காட்டிலும் மேன்மையை உடையது ராம பாதுகையின் ஆராதனம். இந்த ராம பாதுகை ஆராதனமானது பாதுகா ராஜ்ஜியத்தில் மட்டும் தான் ஸாத்யமானது. ஆதலால் பாதுகாராஜ்யம் அத்யந்த ச்ரேஷ்டமானது என்று அத்யத்புதமாக ஸாதிக்கிறார் நம் தூப்புல் வள்ளல்.

மேலும் பாதுகா ஸஹஸ்ரம் ஸமாக்யா பத்ததியில் ஸ்வாமி நம்மாழ்வாருக்கு ஸ்ரீசடாரியான பாதுகைகளுக்கும் உள்ள ஒப்புமையைக் காட்டுகிறார். ஆக பாதுகா ஆராதனம் என்பது ஆழ்வார் ஆராதனமும் கூட!

ஆழ்வார் நம்போன்ற சேதனர்களுக்காக செய்யும் பேருபகாரம் தான் எப்படிப்பட்டது?

*த்ரமிடோபநிஷந் நிவேச சூந்யாந்*
*அபி லக்ஷ்மீரமணாய ரோசயிஷ்யந் |*
*த்ருவமாவிசதி ஸ்ம பாதுகாத்மா*
*சடகோப: ஸ்வயமேவ மாநநீய:|| [22]*

''எல்லாராலும் போற்றப்படுகின்ற ஸ்வாமி நம்மாழ்வார் அனைவரும் பெருமாளை அடைந்து உஜ்ஜீவிக்கவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு திருவாய்மொழியைத் தந்தருளினார். இருப்பினும் பலர் அத்திருவாய்மொழியைக் கற்று உபாஸிப்பதில்லை. அப்படி கற்காதவர்களும் பெருமாளை அடைவதற்காக ஆழ்வார் தாமே பாதுகையாக அவதரித்து அனைவரின் சிரஸ்ஸிலும் ஸ்ரீசடாரியாக ஸாதிக்கப்பெற்று, அந்த ஸம்பந்தம் மூலமாக திவ்ய தம்பதிகளின் அநுக்ரஹத்திற்குப் பாங்காக அனைவரையும் மாற்றியருளினார்'' என்று ஆழ்வாரின் அருளிச்செயல்களை அறியாதவர்களும் உய்ய வேண்டுமென்று அவர் ஸ்ரீசடாரியாகத் திருவவதரித்த வைபவத்தை முன்னிட்டு அந்த ரீதியிலும் பாதுகா ராஜ்யத்தின் பெருமையை நிர்தாரணம் பண்ணுகிறார் ஸ்வாமி தேசிகன்.

*நிச்சேஷமம்பரதலம் யதி பத்ரிகா ஸ்யாத்*
*ஸப்தார்ணவீ யதி ஸமேத்ய மஷீ பவித்ரீ*
*வக்தா ஸஹஸ்ரவதந: புருஷ: ஸ்வயம் சேத்*
*லிக்யேத ரங்கபதி பாதுகயோ: ப்ரபாவ: [32]*

''பாதுகைகளின் பெருமைகளைப் பேசித் தலைக்கட்ட முடியுமா? முடியும்! எப்படியென்னில் ஆகாயம் முழுவதையும் சேர்த்து ஒரு காகிதமாக்கி, ஏழு கடல்களையும் இணைத்து எழுதும் மையாக ஆக்கி, எழுதுபவன் ஆயிரம் தலைகளை உடைய பரமபுருஷனான ஸ்ரீரங்கநாதனாக இருக்க வேண்டும். இப்படியிருந்தால் பாதுகைகளின் பெருமைகளை ஏதோ ஒரு சிறிய அளவு எழுத முடியும்'' என்று கவிஸிம்ஹமே கூறுவதுபோல பாதுகாதேவியின் மாஹாத்ம்யத்தை யாராலும் முழுவதுமாக அறிந்துகொள்ளவோ பேசித் தலைக்கட்டவோ முடியவே முடியாது என்பது திண்ணம்.

***(நிறைவடைந்தது)***


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:

# தாமரையும், தாயாரும், தாமரையாள் கேள்வனும்

ஸ்ரீமதி இந்திரா ரமேஷ், பெங்களூரு

சூரியனின் கிரணம் கண்டதும் தாமரை அழகாய் மலரும். ஆனால் எப்பொழுதும் மலர்ந்திருப்பவள் மஹாலக்ஷ்மி தாயார், ஸ்ரீமந்நாராயணின் விசேஷ கடாக்ஷத்தால். நம் தாயாருக்கும் தாமரைக்கும் பல மஹனீயர்கள் வடமொழியிலும், திராவிட மொழியிலும், ஒப்புமைப் படுத்தி உள்ளார்கள.

தாயார் ஹிரண்மயி. சிவந்த நிறம் உடையவள். ஸ்ரீமந்நாராயணனை ப்ரீதி வாத்ஸல்யத்துடன் பார்ப்பதால் பகவானின் கண்களும், திருக்கரங்களும், திருவடியும் சிவந்து உள்ளது.

நம் தாயாருக்கும் தாமரைக்கும் பல வகையில் ஸம்பந்தம் உண்டு. அவளது அர்ச்சனையிலும் கூட, தாமரையினை உருவகப்படுத்தித் துதிப்பர்.

''பத்ம ப்ரியாம், பத்ம ஹஸ்தாம், பத்மாக்ஷீம், பத்ம ஸுந்தரீம், பத்மோத்பவாம், பத்மமுகீம் பத்மநாப ப்ரியாம் ரமாம், பத்ம மாலாதராம், தேவீம் பத்மிநீம், பத்ம கந்திநீம், பத்மதளாயதாக்ஷீம்'' என்ற லக்ஷ்மீ ஸ்தோத்ர சத நாமாவளியில் தேவி தாமரையாகவே அர்ச்சிக்கபடுகிறாள்.

தாயாரின் ஸ்பர்சத்தால் அவனது திவ்ய அவயங்கள் தாமரைக் கண்களாகவும் தாமரைக் கைகளாகவும், கமல மலர்ப் பாதமாகவும் காண்கிறோம். ஆழ்வார்கள் தங்களின் பாசுரங்களில் அவளை 'தாமரையாயும்' பகவானை 'தாமரையாள் கேள்வன்' என்றும் மங்களாசாஸனம் செய்கின்றனர்.

அர்ச்சா ரூபங்களில் பல க்ஷேத்ரங்களில் தாயார், தாமரையில் அவதரித்ததால் அவளுக்குத் தாமரை ஸம்பந்தப்பட்ட திருநாமமே இருப்பதை நாம் அறிவோம்.

திருமலை ஸ்ரீநிவாஸனின் தேவி, ஸ்ரீ பத்மாவதி தாயார். பத்மஸரோவர் என்ற தாமரைக்குளத்தில் தோன்றியவள் அல்லவா! ஆமலர்ந்த தாமரையவள் ஏழுமலையில் உதித்த சூரியனான வெங்கடேசனின் கரம் பற்றி அவன் பக்கலிலிருந்து நம் எல்லோரையும் ரக்ஷிக்கிறாள்.

''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறை மார்பா'' ( 6-10-10 ) என்று பிராட்டியின் புருஷகாரம் பற்றி நம்மாழ்வார் குறிப்பிட்டுள்ளார்.

திருவரங்கத்தைக்காட்டிலும் பழமையானது திருவெள்ளறை க்ஷேத்ரம். பங்கஜவல்லித் தாயார் இங்கு பூக்ணற்றில் தவம் இருந்து பெருமாளைக்கரம் பிடித்தாள். இந்த தாயாரும் புண்டரீகாக்ஷப் பெருமாளும் க்ஷேத்ரத்தை அலங்கரித்து நமக்கு அருள் பாவிக்கின்றனர்.



பெரியாழ்வார் திருமொழி காப்பிடல் பதிகம் பங்கஜவல்லித் தாயாரையும் பெருமாளையும் கண்ணெச்சில் படாது இருக்க திருஷ்டி சுற்றும் பதிகம்.

*இந்திரனோடு பிரமன் ஈசன் இமையவரெல்லாம்*
*மந்திரமாமலர் கொண்டு மறைந்துவராய் வந்து நின்றார்*
*சந்திரன் மாளிகைசேரும் சதுரர்கள் வெள்ளறை நின்றாய்*
*அந்தியம்போது இதுவாகும் அழகனே! காப்பிடவாராய்.* [2-8-1]

என்று தொடங்கி 10 பாசுரங்கள் இந்த க்ஷேத்ரத்தைப் பற்றி யசோதை பிராட்டியாய் தன்னை பாவித்து பாடியுள்ளார்.

உறையூர் திவ்ய க்ஷேத்ரத்தில், அமுதினும் இனிய பெண்ணுருவாய் உறைபவள், ஆயிரம் இதழ்கள் நடுவில் தோன்றி நந்த சோழ மன்னனால் வளர்க்கப்பட்டவள். தாமரையில் தோன்றியதால் கமலவல்லி என்ற திருநாமத்துடன் அழகிய மணவாளனைக் கைபற்றி நம்மை காக்க அங்கேயே உறைகிறாள்.

இந்த க்ஷேத்ரத்தின் மற்றொரு விசேஷம் திருப்பாணழ்வார் அவதார ஸ்தலம்.

அரங்கனுக்கு மங்களாசாஸனம் செய்தவர். அண்டர்கோன் அணிஅரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றைக் காணாவே என்று அவர் விளித்த அந்த அரங்கனே இங்கு அழகிய மணவாளனாய் இருப்பது உறையூரின் ஏற்றம்.

ஆமருவியப்பானாய் தேரெழுந்தூரில் எழுந்தருளி இருக்கும் தேவாதிராஜனின் கரம் பற்றி நம் புருஷகார பூதையாய் ரக்ஷிப்பவள் செங்கமலவல்லித் தாயார்.

*திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழியில்,*
*செங்கமலத்த திருமகளும் புவியும்*
*செம்பொன் திருவடியினிணைவருட முனிவரேத்த*
*வங்கமலி தடங்கடலுள் அனந்தனென்னும்*
*வரியரவினணைத் துயின்ற மாயோன் காண்மின்*
*எங்குமலி நிறைபுகழ் நால்வேதம் ஐந்து*
*வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை*
*அங்கமலத்தயனனையார் பயிலும் செல்வத்து*
*அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே.*

என்றும் காண்கிறோம்.

இராமாயணத்தை ஸ்ரீமந்நாதமுனிகளின் ஆசியுடன் அரங்கேற்றிய கம்பநாட்டாழ்வான் பிறந்தது இவ்வூரின் மற்றொரு சிறப்பு.

திருக்குடந்தையில் பொற்றாமரைக் குளத்தில் தோன்றி அன்புடன் நம்மைக் காக்க வந்தவள் கோமளவல்லித் தாயார். இந்த க்ஷேத்ரம் பாஸ்கர க்ஷேத்ரம் என்பதாகும். ஆராவமுதனான அந்த சூரியனைக் கண்டு தாமரையாய் மலர்ந்து மகர மாதத்தில் கரம் பிடித்த கோமளவல்லித் தாயாரும் தாமரையாள் கேள்வனும் வாத்ஸல்யத்தோடு நம்மை ரக்ஷிக்கின்றனர். த்ராவிட வேதத்தை ஸ்ரீமந்நாதமுனிகளின் மூலம் உய்விக்க அடி வகுத்தது இந்த க்ஷேத்ரமே.

நம்மாழ்வார் ''செம்மாகமலம் செழுநீர் மிசைக் கண்மலரும் திருக்குடந்தை அம்மாமலர் கண்வளர்கின்றானே! என்நான் செய்கேனே?'' என்று அகமகிழ்ந்து அருளினார். (5-8-2)

அரசாணிப்பாலை வேங்கடாத்ரி கவி என்பவர் பிராட்டி அவதரித்த திருபாற்கடல், இவளைத்தாங்கும் தாமரை, இவள் நித்யம் உறையும் எம்பெருமானின் திருமார்பு முதலான பிராட்டி உறையும் இடங்களின் பெருமைகளை கூறுகிறார் (லக்ஷ்மீ ஸஹஸ்ரம் - தாம வைபவ ஸ்தபக: - 18).

பல புஷ்பங்கள் இருந்தும் தாமரையில் மட்டும் பிராட்டி உறைவது ஏன்? என் செய்வது? பாக்யம் சிலருக்கே அமைகிறது. தாமரை அந்தப் பேரைப் பெற்றது என்கிறார்.

இந்த ஸ்தபகத்தின் 9-ம் ச்லோகத்தில் பெருமாளுக்கு துளஸி மேல் எப்படி அதீத ப்ரியம் உண்டோ அவ்வண்ணமே நறுமணம் பொருந்திய எத்தனையோ மலர்கள் பல இருப்பினும், தாமரைக்கு அந்த பாக்யம் திருவானவள் அதில் வசிப்பதாலே தான்.

பாக்யம், அத்ருஷ்டம், பேறு, என்றெல்லாம் சொல்கிறோமே, அது வேறு ஒன்றுமில்லை திவ்ய தம்பதிகளின் உகப்பு தான்.

கர்மங்களும் தர்மங்களும் தகுதிகளைத் தரலாம். அவற்றை பெருமாளுக்கும் பிராட்டிக்குமாக அர்ப்பணித்தால் அதிர்ஷ்டம் பெறலாம். தகுதிகள் உடையார்க்கெல்லாம் தக்கவாறு அத்ருஷ்டம் உண்டோ? திருமகள் அருளாலன்றோ திகழலாம் அதிர்ஷ்டம் பெற்று.

நித்ய விபூதிக்கு நிகராகத் தாமரையைக் கூறுகிறார் இந்த ஸ்தபகத்தின் 10-ம் ச்லோகத்தில்.

திருநெடுந்தாண்டகம் 21-ம் பாசுரத்தில் கைவண்ணம் தாமரை வாய் கமலம் போலும் கண்ணிணையும் அரவிந்தம் அடியும் அஃதே என்று கலியன் உரைக்கின்றார். தாயாரின் தாமரையுடனான ஸம்பந்தத்தையும் தாமரையாள் கேள்வனின் சிறப்பையும் தாமரையின் பாக்யத்தையும் அறியும் போது, மற்ற பூக்களும் பூக்களாகுமோ என்று தோன்றுகிறது.

தயை, க்ஷமை கொண்ட தாயாரின் புருஷகாரத்தினால் தாமரையாள் கேள்வனின் அருள் நமக்கு எளிதாய்க் கிட்டுகிறது என்பதில் ஏதும் ஐயம் உண்டோ! ❃


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான
கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன்,
நம் தேவஸ்தானத்தின் **'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு, மயிலாப்பூர்,
சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (22)

## Senses Are Meant To Be Employed For Divine Experience

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Whatever we are in this birth is as a result of our earlier Karma (balancing good and bad) and the Lord simply follows the rules He Himself has laid down in His disposition. This has been unequivocally established by our great Acharyas drawing from the Vedas and Saasthras. The knowledge that it is only the Lord's grace that can lift us spiritually (even for material upliftment also, for that matter, but we are not discussing this here) is quintessential and one should constantly strive to raise the bar in the quest to keep evolving as a better person. Of course, this is a continuous process and not an end.

For this effort to fructify, one must be in good control over the senses — both the Jnaana Indiriyas and Karma Indriyas. This has been amply dealt with and asserted in various scriptures. The Azhwars and the Acharyas have given to us these things on a platter, so to say, as otherwise it will be difficult for us to learn them from legends. Their unbound compassion towards us has to be realised, marvelled at and made to count.

The body and soul that we are in possession are the courtesy of Lord Sriman Narayana and we must use them primarily for His service. That is why Prapaththi (Saranaagathi) is such a principal tenet of our Sampradaya and a mandatory act. Post-Prapaththi also, our senses have to be employed for the sake of the Lord.

One cannot but wonder how Nammazhwar and Thirumangai Azhwar — the two most prolific Azhwars — have, in one voice, illustrate this. In fact, they have dedicated a decad each in driving home the point in Mudiyaane – Thiruvoymozhi 3-8 and Neel Naagam – Periya Thirumozhi 11-7, respectively.

Kaliyan is assertive that the purpose of our birth and the bestowing of the body to us by the Lord with parts like the eyes, ears, mouth, nose, etc. are only for them to be immersed in His divine experience. In 'Neel Naagam', he decries the eyes, etc. which are not employed in experiencing the Lord, and declares that they are not worth their names.

The gist of the 10 Paasurams from 'Neel Naagam' is given below:

1. The eyes of those who do not see the Lord are no eyes at all.
2. Those ears which do not hear His glory are no ears at all.
3. The words of those who do not speak His glory are no words at all.
4. The songs of those who do not sing His praise are no songs at all.
5. Those hands which do not worship Him are no hands at all.
6. We shall not consider the heart of those who do not think that Thulasi and flowers like lotus are only for Him when they see them, as heart at all.
7. The heart of those who are not devoted to the Lord and fail to meditate on Him forever are no heart at all.





8. Those who do not contemplate and realise Him are ignorant forever.
9. I do not consider those who do not put themselves at His service as men at all.
10. Sing this decad and dance praising the glory of the discus-wielding Lord in order to rid of sins.

If Thirumangai Azhwar is categorical in his observation in the above decad, Nammazhwar comes up with an animated personal experience on the subject in 'Mudiyaane'. Just a while before that, the Azhwar yearns when his eyes will get to see the feet of the Lord who rode the chariot (... அன்று தேர் கடவிய பெருமான் கனைகழல் காண்பது என்று கொல் கண்களே! – Thiruvoymozhi 3-6-10).

The longing grows greater and becomes unbearable as he pours his heart out one decad later. Here goes the outline of the Azhwar's divine experience in the 11 verses from 'Mudiyaane'.

1. O my Lord, my heart yearns for You.
2. O my manikin Lord who took the earth, my mouth (tongue) praises You all the time.
3. O protector of cowherds, my hands feel for You.
4. O Lord lying on the serpent couch, my eyes are eager to see You.
5. O Lord, my ears yearn to hear the rustle of Garuda's fluttering wings.
6. discus-wielding Lord, my soul ceaselessly craves for You.
7. O my Lord, my soul, wicked me is unable to see Your beautiful form, despite my call of grief.
8. Lord of the three times, when will I see You?
9. Bird-riding Lord, when will I attain You?
10. O my Lord, how long will I weep here to see Your lotus feet?
11. Those who sing this decad will ascend Paramapadham.

These utterances by the Azhwars are meant for us to take a leaf out of their experiences and endeavour to emulate them by pledging our body and soul in service of the Lord. This, while being enjoyable, will be rewarding too.

*(to be continued…)*

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners 22

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter - 21**

**Gathi Visesha Adhikaram**

This chapter talks about the path Upaya Nishta takes to attain Sri Vaikuntam.

As said in the previous chapter, the Mumukshu enters the Brahma Nadi illuminated by Bhagavan. He is carried by Hardha just like a toddler prince, who has not yet started speaking, is carried lovingly upon the shoulders of the King, during walks. Bhagavan himself accompanies Prapanna because of His infinite compassion, just like this King.

The Prapanna sets upon Devayana path through the sun's rays and piercing through it, enters through a hole in the centre of Surya Mandalam. The Prapanna travels through this path feted by Archis (Agni), Ahas (daylight), Sukla paksham, Utharayanam, Samvatsaram (year), Vayu, Adityan, Chandran and Vidyut (lightning). These are Abhimaani Devathas for day, year, etc. Along with Amaanava, (or Vidyut - this is again a form of Bhagavan), supported by Varuna, Indra, Prajapathi, etc., the Prapanna has the pleasurable experience of being hosted by these Devathas till their borderlands.

As soon as he reaches his long-coveted destination of Sri Vaikuntam, the subtle Boothas with which he made the journey after leaving the Sareeram on earth, are dropped off in the banks of Viraja River. This subtle Boothas (Sookshma Sariram), senses (Indriyam), etc., were carried by him not because of karma but by capability of his Upaaya just for the purpose of the journey and it is not needed any more and discarded like a used boat after reaching ashore.

After crossing the Viraja River, he gets Aprakrutha Sareeram (not made of Trigunam but only of Shuddha Sathvam) reaches a pond called Iyrammadheeyam, crosses a peepul tree called Somasavanam and he sees ahead 500 apsara ladies, 100 of them carrying garlands, 100 of them carrying Kajal, 100 of them with Sri Choornam, 100 with perfumes and 100 with gold ornaments, etc. to adorn him. He gains a similar appearance to Brahmam and is luminant, etc. which is called Saaroopyam. All this is caused by Bhagavan every step of the way. The Nithyasuris welcome him with gifts and accompany him till the temple doors. He then approaches the Dwara Palakas, who fete him and accompany him to the blissful central mandapam.

As he desired, in compensation of what all he lost being in samsara so far, he gets the divine vision of Bhagavan in all His glory. He experiences Bhagavan in full. He joins the fortunate group of Chethanas who have been there eternally and there are no further impediments to divine experiences based on time, space, state of being, etc. He can do all Kainkaryams as he desires eternally with no end thereafter. He mingles with Nithyasuris easily like friends of same age and there is no differentiation between this new entrant and those who have been there eternally in terms of experiencing Bhagavan and Sriman Narayana is in a blissful state having brought back this Prapanna from Samsara.

Swami then clarifies that the different Archiradhi paths described in Madhu Vidhya context, in Mahabaratha, Jayath Samhitha, Sri Pancharatra, etc., belong to different Adhikaris as per their eligibilities. Some Mukthas reach Vaikuntam after being in Vasu, Rudra, Aditya posts and some reach from Sathyalokam having been in Brahma's Sareeram. These relate to Bhakti Yoga and hence we need not concern ourselves with it, says Swami.

For Mokshartha Prapatthi Nishtan meditating upon this Archiradhi Gathi is not part of his Upaaya, unlike Bhakti Yoga Nishtas. However, just like the bride or the groom having a happy countdown till the date of the wedding, it is beneficial for a Prapanna too to contemplate upon this path and the experiences awaiting him as Purushartha Dhyanam. It enhances his affection to Bhagavan and thus purposeful, but even without specific contemplation, his desires will be fruitful.

It is said in Ramayana, that Sita Piratti, while suffering in Asokavanam, used to fly on a chariot drawn by horses mentally (Manoratham) to reach Rama and thus sustain herself. Similarly a Prapanna should meditate upon and visualise Archiradhi Gathi and remain enthused about the pleasures awaiting him.

*(to be continued…)*




‘நாம ஸாகர்’ ஸ்ரீஸ்ரீ விட்டல்தாஸ் மஹராஜ் நாம ஸங்கீர்த்தனம்






‘நாம ஸாகர்’ ஸ்ரீஸ்ரீ விட்டல்தாஸ் மஹராஜ் நாம ஸங்கீர்த்தனம்

